# அமர்சேவா சங்கத்திற்கு பேட்டரி கார் வழங்கும் விழா



ஆய்க்குடி அமர் சேவா சங்கத்திற்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்ப நிதியுதவியின் கீழ் பேட்டரியால் இயங்கும் கார் வழங்கும் விழா சங்க வளாகத்தில் 12.07.2014 அன்று நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவரின் சார்பில் கோட்டாச்சியர் ரெகோபெயாம், தென்காசி தாசில்தார் சொர்ணராஜ் ஆகியோர் கலந்து கொண்டு, மாற்றுத்திறன் குழந்தைகள் அமர் சங்க வளாகத்திற்குள் செல்வதற்கு ஏதுவாக பேட்டரியால் இயங்கும் காரின் சாவியை அமர்சேவா சங்க தலைவர் இராமகிருஷ்ணனிடம் வழங்கினார்.

இக்கார் முதன்முதலாக கோட்டாச்சியர், அமர்சேவா சங்க உதவித் தலைவர் எம்.ஆர். சீனிவாசன், கமிட்டி உறுப்பினர் சிதம்பரம் மற்றும் குழந்தைகளுடன் இயக்கப்பட்டது.. உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் இருபுறமும் நின்று கரவொலி எழுப்பி மகிழ்ந்தனர்.

ஆய்க்குடி பேரூராட்சித் தலைவர் குட்டியம்மாள், செயலாளர் முத்துக்குட்டி, கிராம நிர்வாக அலுவலர் இசக்கி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். கமிட்டி உறுப்பினர் டாக்டர் சுமதி அனைவரையும் வரவேற்றுப் பேசி நினைவுப்பரிசு வழங்கினார். ஆசிரியர்களும் பணியாளர்களும் விழா ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

UDAVIKKARAM உதவிக்கரம் July 2014
Licenced to post without prepayment
Date of Publication : 25th of Every Month
R.N.I. No. : 72324/99
Postal Regd. No. : TN/CC(S)Dn/21/12-14
WPP No. : TN/PMG(CCR)/WPP-680/12-14
POSTED AT EGMORE - RMS/1 - PATRIKA CHANNEL

# அமர் சேவா சங்கத்திற்கு பேட்டரி கார் வழங்கும் விழா



திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் விருப்பநிதி உதவியின் கீழ்
ஆய்க்குடி அமர் சேவா சங்கத்திற்கு பேட்டரி கார் வழங்கப்பட்டது

*செய்தி உள்ளே...*